# 5வது சிறுவழக்குகள் நீதிமன்றம்

## ( மோட்டார் வாகன விபத்து வழக்குகள் தீர்ப்பாயம், சென்னை)

## MCOP No.1631/2018

| சாட்சியின் வரிசை எண் | மசா1 |
|---|---|
| பெயர் | ஸ்ரீவெட்டி ஜோதி |
| க/த.பெயர் | ராஜா |
| வயது | 60 |
| விலாசம் | நெல்லூர், ஆந்திரபிரதேசம் |
| தொழில் | ... |

சாட்சி அமர்வு எழுத்தரால் உறுதி மொழி சட்டம் 1969 ன் பிரிவு 6ன் படி சத்திய பிராமணம் செய்விக்கப்பட்டு அதன் படி அவரது சாட்சியம் இன்று 14.11.2025 ல் பதிவு செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் மனுதாரர் ஆவேன். வாகன விபத்தில் எனக்கு ஏற்பட்ட காயங்களுக்கு இழப்பீடு கோரி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன். இதில் என்னை எனது தரப்பில் முதல் சாட்சியாக விசாரித்து கொண்டு எனது முதல் விசாரணை வாக்குமூலத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதான். அதை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். இதில் கீழ்கண்ட ஆவணங்களை குறியீடு செய்துக்கொள்ள வேண்டுகிறேன். முதல் தகவல் அறிக்கை மசாஆ1, பிரேத விசாரணை அறிக்கை மசாஆ2, இறப்பு அறிக்கை மசாஆ3, உடற்கூராய்வு அறிக்கை மசாஆ4, இறப்பு சான்றிதழ் மசாஆ5, வாரிசு சான்றிதழ்

மசாஆ6, பிறப்பு சான்றிதழ் மசாஆ7, 10ம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ் மசாஆ8, வி. ஆர். கல்லூரி மாற்றுசான்றிதழ் மசாஆ9, ITI தொழில் பயிற்சி சான்றிதழ் மசாஆ10, CNC தொழில் பயிற்சி சான்றிதழ் மசாஆ11, வாக்காளர் அடையாள அட்டை நகல் மசாஆ12, இறந்தவரின் ஆதார் அட்டை நகல் மசாஆ13, இறந்தவரின் தந்தை இறப்பு சான்றிதழ் மசாஆ14, வரைபடம் மசாஆ15, மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை மசாஆ16, 1வது மனுதாரரின் ஆதார் அட்டை நகல் மசாஆ17, 1கூது மனுதாரரின் பான் அட்டை நகல் மசாஆ18, 2வது மனுதாரரின் ஆதார் அட்டை நகல் மசாஆ 19.

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் இந்த விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் இந்த விபத்தை நேரடியாக பார்க்காததால் யார் இருசக்கர வாகனத்தை ஓட்டினார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். பிரமான வாக்குமூலத்தில் மர பாலிஸ் வேலையும், இறப்பு அறிக்கையில் கார்பென்டர் வேலையும் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மகனுடைய நண்பனும், என் மகனும் குடிபோதையில் வாகனத்தை ஓட்டியதால் வாகனத்தை ஓட்டி விபத்தை ஏற்படுத்தினார்கள் என்றால் சரியல்ல. மகனுடைய நண்பனும், என் மகனும் குடிபோதையில் வாகனத்தை ஓட்டியதால் தான் விபத்து பதிவேட்டை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, விபத்து பதிவேடு தாக்கல் செய்யவில்லை. என் மகன், மகள் அவர்களுக்கு திருமணம் ஆகிவிட்டதா என்றால் இல்லை. என் மகனுக்கும், என் மகனின் நண்பனுக்கும் முறையான ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான். என் மகனின் தொழில் மற்றும் வருமானம் குறித்த ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். காப்பீடு நகல் நீதிமன்றத்தில் தாக்கல்

செய்யவில்லை என்றால் சரிதான். காப்பீடு நகலை தாக்கல் செய்யதால் தான் நான் என்ன காப்பீடு செய்தேன் என்பது பற்றி தெரியவரும் என்றால் சரிதான். மகனுடைய நண்பனும், என் மகனும் குடிபோதையில் வாகனத்தை ஓட்டியதால் வாகனத்தை ஓட்டியால் தான் விபத்து ஏற்பட்டது அதனால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது,

**5 வது நீதிபதி**
**சென்னை**